**சுருக்கம்**

வணிகவரி துறை– அறிவிப்புகள் – வணிகர் குறை தீர்க்கும் நாள் கடைப்பிடித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது

---

**வணிகவரி(ம) பதிவு(டி2) துறை**

அரசாணை (நிலை) எண்.80

நாள் : 16.10.2014
ஜெய, புரட்டாசி – 30
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்கப்பட்டது :

முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர் கடித எண்.சகு6/25067/2014, நாள் 18.9.2014

*******

**ஆணை**

2014–2015–ஆம் ஆண்டு வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு அமைச்சர் (வணிகவரி(ம) பதிவு) அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் கீழ்க்கண்ட அறிவிப்பினை செய்துள்ளார்கள்:–

"ஒவ்வொரு மாவட்டத்திலும், வருடத்திற்கு இருமுறை வணிகர்களுக்கான விழிப்புணர்வு முகாம்கள் (awareness camp) நடத்தப்படுவதன் தொடர்ச்சியாக, வணிகர்களுக்கும், வணிக வரித் துறை அலுவலர்களுக்கும் இடையே உள்ள தொடர்பு மற்றும் தகவல் பரிமாற்றம் ஆகியவற்றை மேம்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு வணிக வரி மாவட்ட துணை ஆணையர் மற்றும் கோட்ட இணை ஆணையர் அலுவலகங்களில் திங்கட்கிழமை தோறும் வணிகர் குறை தீர்க்கும் நாள் கடைபிடிக்கப்படும்."

2) மேற்படி அறிவிப்பு தொடர்பாக முதன்மைச் செயலர்/ வணிகவரி ஆணையர் மேலே படிக்கப்பட்ட தமது கடிதத்தில் ஒவ்வொரு வணிகவரி கோட்டத்தில் இணை ஆணையர் அலுவலகத்திலும், ஒவ்வொரு வணிகவரி மாவட்டத்தில் துணை ஆணையர் அலுவலகத்திலும் ஒவ்வொரு திங்கட்கிழமைதோறும் காலை 11 மணி முதல் பிற்பல் 1 மணி வரை வணிகர்கள் குறை தீர்க்கும் நாள் கடைபிடிக்கப்படும் என்றும் அச்சமயத்தில், வணிகர் சங்க/சரக்கு வாகன உரிமையாளர் சங்க பிரதிநிதிகளோ அல்லது தனிப்பட்ட வணிகர்களோ/ வாகன உரிமையாளர்களோ, துணை ஆணையர் அல்லது இணை ஆணையரை நேரில் அணுகி தங்கள் தொடர்பான துறை சார்ந்த குறைகளை எழுத்து மூலமாகவோ அல்லது வாய் மொழியாகவோ தெரிவித்து, நிவர்த்தி செய்து தரும்படி கோரிக்கை விடுக்கலாம் எனவும், அவ்விதம் பெறப்படும் குறை நிவர்த்தி தொடர்பான கோரிக்கைகள் அதற்கென்று ஏற்படுத்தப்பட்டுள்ள பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் நிவர்த்தி செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்படும் என்றும் ஒவ்வொரு குறை தொடர்பான கோரிக்கை அடிப்படையிலும், உடனடியாக தொடர்புடைய சார்பு அலுவலகங்களுக்கு வாய்மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டு, மூன்று அலுவல் தினங்களுக்குள்ளாக உரிய நடவடிக்கைகள் எடுத்து மனுதாரர்களுக்கு 10 அலுவல் தினங்களுக்குள்ளாக அஞ்சல் மூலம் தகவல் அளிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். வணிகவரி ஆணையர் அலுவலகத்திலிருந்து மேற்படி அறிவிப்பு தொடர்பான நடைமுறைகள், சுற்றறிக்கை மூலமாக அனைத்து அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் மேற்காணும் முன்மொழிவின்மீது அரசாணை வெளியிடுமாறு வணிகவரி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3) முதன்மைச்செயலர்/வணிகவரி ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து அதனை ஏற்க முடிவு செய்தது. அதன்படி வணிகர்களுக்கும், வணிக வரித் துறை அலுவலர்களுக்கும் இடையே உள்ள தொடர்பு மற்றும் தகவல் பரிமாற்றம் ஆகியவற்றை மேம்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு வணிகவரி மாவட்ட துணை ஆணையர் மற்றும் கோட்ட இணை ஆணையர் அலுவலகங்களில் திங்கட்கிழமை தோறும் வணிகர் குறை தீர்க்கும் நாள் கடைபிடிக்க வேண்டும் எனவும் அவ்வமயம் மேலே பத்தி 2–ல் வணிகவரி ஆணையரால் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே.பிரபாகர்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர், சென்னை–5
அனைத்து வணிகவரி இணை/துணை ஆணையர்கள்
(முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக)
முதன்மைச் செயலர்/கூடுதல் ஆணையர், வணிகர்நல வாரியம், சென்னை–5
தலைவர், தமிழ்நாடு வரிவிதிப்பு தீர்ப்பாயம், சென்னை–104
நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
சிறப்பு நேர்முக உதவியாளர், அமைச்சர்(வணிகவரி(ம) பதிவு), சென்னை–9
நிதித்துறை, சென்னை–9
சிறப்பு திட்ட செயலாக்கத் துறை, சென்னை–9
வணிகவரி (ம) பதிவு(எ/பி/இ/எப்/யு)துறை,சென்னை–9
இகோ/உதிரி

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர்.

சுற்றறிக்கை எண்.51/2014
சட்டக்குழு எண்.6/25067/2014

முதன்மை செயலர்/
வணிகவரி ஆணையர் அலுவலகம்,
எழிலகம், சேப்பாக்கம்,
சென்னை–600 005.

நாள் : 27.10.2014

<u>சுற்றறிக்கை</u>

பொருள் : வணிகவரித் துறை – அறிவிப்புகள் – வணிகர் குறை தீர்க்கும் நாள் கடைப்பிடித்தல் – பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் – தொடர்பாக.

பார்வை : ஆரசாணை (நிலை) எண்.80, வணிகவரி (ம) பதிவு (டி2) துறை, நாள் 16.10.2014.

---

2014–2015– ஆம் ஆண்டு வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் மானியக் கோரிக்கையின்போது மாண்புமி'க அமைச்சர் (வணிகவரி (ம) பதிாவு) அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் கீழ்கண்ட அறிவிப்பினை செய்துள்ளார்கள்:–

"ஒவ்வொரு மாவட்டத்திலும், வருடத்திற்கு இருமுறை வணிகர்களுக்கான விழிப்புணர்வு முகாம்கள் (awareness camp) நடத்தப்படுவதன் தொடர்ச்சியாக, வணிகர்களுக்கும், வணிகவரித் துறை அலுவலர்களுக்கும் இடையே உள்ள தொடர்பு மற்றும் தகவல் பரிமாற்றம் ஆகியவற்றை மேம்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு வணிக வரி மாவட்ட துணை ஆணையர் மற்றும் கோட்ட இணை ஆணையர் அலுவலகங்களில் திங்கட்கிழமை தோறும் வணிகர் குறை தீர்க்கும் நாள் கடைபிடிக்கப்படும்."

மேற்படி அறிவிப்பு தொடர்பாக அரசாணை (நிலை) எண்.80, வணிகவரி (ம) பதிவு (டி2) துறை, நாள் 16.10.2014–ல் வழங்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், வணிகர் குறை தீர்க்கும் நாள் கடைப்பிடித்தல் தொடர்பாக கீழ்காணும் நடைமுறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

1. ஒவ்வொரு வணிக வரி மாவட்ட துணை ஆணையர் மற்றும் கோட்ட இணை ஆணையர் அலுவலகங்களில் திங்கட்கிழமை தோறும் காலை 11.00 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை வணிகர் குறை தீர்க்கும் நாள் கடைபிடிக்கப்படவேண்டும். இதற்கான அறிவிப்பு பலகை அலுவலக நுழைவாயிலில் பிரசுரிக்கப்படவேண்டும்.

2. வணிகர் குறை தீர்க்கும் நாள் கடைபிடிக்கும் சமயத்தில் வணிகர் சங்க/சரக்கு வாகன உரிமையாளர் சங்க பிரதிநிதிகளோ அல்லது தனிப்பட்ட வணிகர்களோ/ வாகன உரிமையாளர்களோ, துணை ஆணையர் அல்லது இணை ஆணையர் அவர்களை அணுகி தங்கள் தொடர்பான துறை சார்ந்த குறைகளை எழுத்து மூலமாகவோ அல்லது வாய் மொழியாகவோ தெரிவித்து நிவர்த்தி செய்து தரும்படி கோரிக்கை விடுக்கலாம்.

3. குறை நிவர்த்தி தொடர்பான கோரிக்கைகள் யாவும் அதற்கென்று ஏற்படுத்தப்பட்டுள்ள பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

4. ஒவ்வொரு குறை தொடர்பான கோரிக்கை அடிப்படையிலும், உடனடியாக தொடர்புடைய சார்பு அலுவலகங்களுக்கு எழுத்து மூலமாக உத்தரவுகள் பிறப்பிக்கப்பட வேண்டும்.

5. உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட மூன்று அலுவல் தினங்களுக்குள்ளாக உரிய நடவடிக்கைகள் எடுத்து மனுதாரர்களுக்கு 10 தினங்களுக்குள்ளாக அஞ்சல் மூலம் தகவல் அளிக்கப்படவேண்டும்.

ஒம்./– க. இராஜாராமன்,
முதன்மை செயலர்/வணிகவரி ஆணையர்

பெறுநர்
அனைத்து இணை ஆணையர்கள் (வணிகவரி)
அனைத்து துணை ஆணையர்கள் (வணிகவரி)

நகல்:

1. அனைத்து கூடுதல் ஆணையர்கள், முதன்மை செயலர்/வணிகவரி ஆணையர் அலுவலகம், சென்னை–5.
2. இணை ஆணையர் (நிர்வாகம்), முதன்மை செயலர்/வணிகவரி ஆணையர் அலுவலகம், சென்னை–5.
3. அனைத்து இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், முதன்மை செயலர்/வணிகவரி ஆணையர் அலுவலகம், சென்னை–5.
4. இணை ஆணையர் (வவ) (கணிப்பொறி மையம்), சென்னை–6 (இச்சுற்றறிக்கையை இணையதளத்தில் வெளியிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது).
5. இயக்குநர், வணிகவரி பணியாளர் பயிற்சி நிலையம், சென்னை–6.
6. முதன்மை செயலர்/வணிகவரி ஆணையர் அவர்களின் நேர்முக உதவியாளர்.
7. கண்காணிப்பாளர், ஒய் பிரிவு, முதன்மை செயலர்/வணிகவரி ஆணையர் அலுவலகம், சென்னை–5.
8. கோப்பு/இருப்புக் கோப்பு

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

கூடுதல் ஆணையர் (மக்கள் தொடர்பு)